# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 13,309—1962 සැප්තැම්බර් 21 වැනි සිකුරාදා—1962.9.21**

13,309 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. | — | விலைக்கட்டளைகள் .. | .. |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 530 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாளுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் | 529 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டீ.—பீ. 17/62.

### 1962 ம் ஆண்டின் 25 ம் இலக்க காப்புறுதிக் கட்டுப்பாட்டுச்சட்டம்

**1 ம் பிரிவின் கீழுள்ள கட்டளை**

1962 ம் ஆண்டின் 25 ம் இலக்க காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 1 ம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டிருக்கும் தத்துவங்களைக் கொண்டு வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்போக்குவரத்து அமைச்ச ராகிய ரிக்கிரி பண்டார இலங்கரத்தின ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் 1962 ம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ம் நாளை மேற்கூறப்பட்ட சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியாக நியமிக்கிறேன்.

ரி. பி. இலங்கரத்தின,
வர்த்தக வியாபார, உணவு, கப்பற்போக்குவரத்து அமைச்சா.

கொழும்பு, 14.9.1962.

9-659/1

---

எல். டீ.—பீ. 17/62.

### 1962 ம் ஆண்டின் 25 ம் இலக்க காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்டம்

பொருள் கோடற் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 2) 12 ம் பிரிவினுடன் இணைத்துவாசிக்கப்படும் 1962 ம் ஆண்டின் 25 ம் இலக்க காப்புறுதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 76 ம் பிரிவின் கீழ்; வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்போக்குவரத்து அமைச்சர், வர்த்தக அதிபரை, 1962 ம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ந் திகதி தொடங்கி அவரின் கடமைகளுடன் காப்புறுதிக் கட்டுப்பாட்டு அதிகாரியாயிருக்குமாறு நியமித்துள்ளார்.

கோ. ஆழ்வாப்பிள்ளை,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்போக்குவரத்து அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1962 ம் ஆம் செப்டம்பர் மீ 14 ந் உ.

9-659/2

---

### முக்கிய விளம்பரம்

*1962 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 26 ந் திகதி புதன்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1962 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 28 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1962 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 22 ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

பேர்னுட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு.
1962 ம் ஆம் புரட்டாதி (செத்தெம்பர்) மீ 14 ந் உ.

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## பிரகடனம்

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள கிராமப்பகுதிகளில் விசர்நாய்களினால் அபாயம் இருப்பதாக நான் திருப்திப் பட்டமையால் திருக்கோணமலை நகரசபை எல்லையைத் தவிர்ந்த திருக்கோணமலை மாவட்டப்பகுதிகள் முழுவதும் 1962 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ம் தேதி தொடக்கம் விசர்நாய் சட்டத்தின் (அத்தியாயம் 476) 11 ம் பிரிவின்கீழ் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது என்பதை இத்தால அறிவித்தல் செய்யப்பட்டிருக்கிறது.

மேற்சொல்லப்பட்ட திருக்கோணமலை மாவட்டப்பகுதிகளுக்குள்ளாகிய பொதுவிடங்களில், அல்லது வீதிகளில், அல்லது சொந்தமான கட்டிடங்கள், வளவுகள், அல்லது தோட்டங்களைத்தவிர்ந்த இடங்களில் காணப்படும் கட்டப்படாத அல்லது விடப்பட்ட எந்த நாயையும் உடனடியாக அழிக்கப்படும்.

டீ. எம். ஏ. ஸ்பெல்டிவின்ட்,
அரசாங்க அதிபர்,
திருக்கோணமலை மாவட்டம்.

9—740

## விளம்பரம்

விஷக்கடித்தடுப்புச் சட்ட 333 ம் அத்தியாயத்தின் 11 ம் பிரிவின்படி கீழ்க்காணும் இடங்களில் விசர்நாய்க் கடித்தொல்லை இருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :—

1. மொனராகல காரியாதிகாரியின் பகுதி.
2. வெள்ளவாய காரியாதிகாரியின் பகுதி.
3. வெல்லஜ காரியாதிகாரியின் பகுதி.
4. விந்தனைப்பற்று காரியாதிகாரியின் பகுதி.

மேற்கூறிய இடங்களில் 1.9.62 லிருந்து ஆறு மாதம் வரைக்கும் சொந்த வீடுகளிலும், காணிகளிலும், தோட்டங்களிலும் உலாவும் நாய்களைத் தவிரப் பொதுவிடங்களிலும், பொதுப்பாதைகளிலும் அழைத்துச்செல்லாமலும், கட்டிவைக்காமலும் காணப்படும் நாய்கள் யாவும் அழிக்கப்படும்.

எஸ். டி. சப்பிரமாது,
மொனராகல மாவட்ட அதிபதி.

கச்சேரி, மொனராகல,
29–8–62.

9–824

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ட்டேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.